தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 24-11-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## திறன் மிகுந்த அறிவார்ந்த சமூகமாக வேளாண் மாணவர்கள் உருவாக வேண்டும்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அண்ணா அரங்கில் வளங்குன்றா வேளாண் வளர்ச்சியில், தொலைதூரக் கல்வியின் பங்களிப்பு வசதி பற்றி பன்னாட்டு கருத்தரங்கு இன்று (24-11-2016) நடைபெற்றது. இந்தியா முழுவதிலும் இருந்து 200க்கும் மேற்பட்ட ஆய்வறிஞர்கள் கலந்து கொண்டு தங்களது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தார்.

விழாவில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள், அறிவு மட்டுமே பயன் தராது, திறனுடன் கூடிய அறிவே பயன் தரும். எல்லோர்க்கும் கற்றுக் கொள்ள வாய்ப்பினை நாம் வழங்க வேண்டும். வழக்கமான கல்வி முறைகளில் பயில இயலாதவர்களுக்கு வேளாண் சார்ந்த தொழில்நுட்ப அறிவினை, உழவர்களுக்கும், விவசாயத்தில் நாட்டம் கொண்டவர்களுக்கும் வழங்க இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்கத்தின் மூலமாக பண்ணைய பட்டப்படிப்பு மற்றும் அது சார்ந்த 10க்கும் மேற்பட்ட சான்றிதழ், பட்டயப்படிப்புகளை வழங்கப்பட்டது.

மாணவர்களுக்கும், ஆசிரிய பெருமக்களுக்கும், பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களை தங்களது அறிவாலும், ஆற்றலை மேம்படுத்த உதவ வேண்டும். இதுபோன்ற பன்னாட்டு கருத்தரங்கில் பங்குபெறும் பல நாட்டு அறிஞர் பெருமக்களிடம் உரையாடி, அவர்களுடன் கலந்து பணியாற்றி அந்நாடுகளில் உள்ள கற்றல் மற்றும்

கற்பித்தல் முறைகளை இங்கு கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். அவ்வவாறு செய்யும் போதுதான் மாணவர்களை உலகளாவிய போட்டிக்கு தயார் படுத்த முடியும் என்றார்.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் எம். பாஸ்கரன் அவர்கள் தமது விழா துவக்கவுரையில் கடந்த அறுபது ஆண்டுகால உழைப்பில் நமது கண்டுபிடிப்புகளை 20 சதவீத மக்களுக்கு மட்டும்தான் கொண்டுபோய் சேர்க்க முடிந்திருக்கிறது. ஆகவே, நம்மிடம் இருக்கும் தொழில்நுட்பங்களை, வேளாண் பெருமக்களுக்கு உரிய வழியில் சேர்க்க தொடர்ந்து முயற்சிக்கும் அதே வேளையில், உழவர்களையும், பொது மக்களையும், தங்களுக்கு தேவையான தொழில்நுட்ப தகவல்களை, தாங்களாகவே தேடி பயனடைய தக்கவாறு தயார்படுத்த வேண்டும். அதற்கு தொலைதூர கல்வி மிக சிறப்பான முறையில் பங்காற்ற முடியும் என்றார்.

விழாவில் கலந்து கொண்டு முக்கியவுரை ஆற்றிய மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையின் விஞ்ஞான் பிரசார் இயக்குநர் முனைவர் ஆர் கோபிச்சந்திரன் அவர்கள், ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புகள், சாதாரண மக்களிடையே பரவலாக்கப்படும் வகையில் எழுதப்பட வேண்டும் என்றார்.

விழா மலரை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் எம். பாஸ்கரன் அவர்கள் வெளியிட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

முன்னதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக திறந்த நிலை மற்றும் தொலைதூரக் கல்வி மையத்தின் இயக்குநர் முனைவர் ப. சாந்தி அவர்கள் வரவேற்புரையும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக திறந்த நிலை மற்றும் தொலைதூரக் கல்வி மைய பேராசிரியை முனைவர் ஜெயராணி அவர்கள் நன்றியுரையும் வழங்கினர்.

மக்கள் தொடர்பு அலுவலர்